CO.S.No.2/2023 தேதி – 12.06.2025

வா.சா.2. – அருண்குமார்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

வா.சா.ஆ.10 முதல் 19 வரை உள்ள ஆவணங்கள் உண்மை நிலையில் பிரதிபலிக்கவில்லை என்றும் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 முதல் 18 வரை உள்ள ஆவணங்கள் என்னால் பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு சாட்சி சொல்ல சம்மன் வந்த நிலையில்தான் நான் பதிவிறக்கம் செய்தேன் என்றால் சரிதான். பதிவிறக்கம் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு வா.சா.ஆ.19 ல் 12 வது இனம் ஆக கூறப்பட்ட விசயத்தில் இந்த சான்றிதழை சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு எண்.சி.ஓ.எஸ்.2/2023 ஆக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 18 ஆவணங்களை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் பதிவிறக்கம் செய்யவில்லை என்றும், சரிவர பரிசீலனை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் 22.02.2025 ம் தேதியன்று 12.53 மணிக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டதாக பதிவு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் உள்ள பதிவுகள் படிக்க இயலாத நிலையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணம் 27.02.2025 ம் தேதி 15.29 மணிக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற பதிவு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல 20.02.2025 ம் தேதி அழைப்பாணை வந்தது. வா.சா.ஆ.15 ல் குறிப்பிடப்பட்டுள்ள வணிகர்களின் பெயர் தெளிவற்ற நிலையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மொத்தம் எத்தனை வணிகர்களின் பெயர் வா.சா.ஆ.15 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 5 வணிகர்களின் பெயர் 3 பக்கங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 5 வணிகர்களுடைய எல்லா வணிக விபரங்களும் பதிவிறக்கம் செய்து வா.சா.ஆ.15 உடன் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 ல் 2021 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வாதி நிறுவனம் கொள்முதல் செய்த பொருட்களுக்கான ஜி.எஸ்.டி செலுத்திய விபரங்களை முதல் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 வணிகர்களில் 3

வணிகர்களுக்குரிய கொள்முதல் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. 2 வணிகர்களுக்குரிய கொள்முதல் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்படவில்லை. 2 வணிகர்களுக்குரிய கொள்முதல் விபரங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 சான்றிதழ் வழங்குவதற்கு முன்பாக அனைத்து இணைப்புக்களும் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறகுதான் சான்று வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. சம்மனில் குறிப்பிட்டு கோரப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பான விசயங்களை நான் பதிவிறக்கம் செய்து சமர்பித்துள்ளேன். வா.சா.ஆ.15 ல் உண்மையான விபரங்களை பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் பிரதிவாதி நிறுவனத்துடன் விற்பனை செய்த விபரங்களை மட்டும் இணைப்பாக பதிவிறக்கம் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதர வணிகர்களின் விற்பனை விபரங்களை பதிவிறக்கம் செய்யவில்லை. சம்மனில் குறிப்பிட்டு கோரப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பான விசயங்களை நான் பதிவிறக்கம் செய்து சமர்பித்துள்ளேன். உண்மையான விபரங்களை பதிவிறக்கம் செய்யவில்லை என்றும் பகுதியாக பதிவிறக்கம் செய்துள்ளதால் வா.சா.ஆ.19 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ல் 2021-2022 வரிவிதிப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பகுதி வரித்தொகையாக ரூ.37,532/- தொகை ரொக்கமாக கட்டப்பட்டதாக உள்ளது. அதற்கான ரசீது வாதி நிறுவனத்திடம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரசீதை நான் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவசியமில்லை. கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.16 ல் மேலும் சில மாதங்களுக்கு வரித் தொகை பகுதி தொகை ரொக்கமாக கட்டப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதற்கான ரசீது வாதி நிறுவனத்திடம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரசீதை நான் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவசியமில்லை. கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.16 உண்மை நிலையை பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 என்னுடைய கணினி மூலமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட வகைக்கு குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். வாதியால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வருமான வரித்துறைக்கு படிவம் சமர்பிக்கும்போது வங்கி கணக்கு விபரங்களை உறுதிமொழியாக

தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் அது போன்று வங்கி கணக்கு விபரங்களை தெரிவித்துள்ளாரா என்றால் பக்கம் 67 ல் தெரிவித்துள்ளார். எச்.டி.எப்.சி வங்கி எண். 0001860 என்றும், கணக்கு எண்.18601530000857 என்று தெரிவித்துள்ளார். வா.சா.ஆ.17 ஆனது ஆக்சிஸ் வங்கி கணக்கு எண். 913020023240808 என்ற கணக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்குகளை தவிர வேறு வங்கியில் வரவு செலவு கணக்குகள் இல்லை என்று உறுதிமொழி தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.1 சாட்சி தன்னுடைய சொந்த சேமிப்பு கணக்கை வா.சா.ஆ.18 ல் தெரிவித்தள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் குறிப்பிடப்பட்டுள்ள எச்.டி.எப்.சி வங்கி வரவு செலவு கணக்குகளை நான் வாங்கி பார்வையிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ல் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து பல்வேறு தொகைகள் வாதி நிறுவனத்திற்கு வரவு வந்துள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட 9 இன்வாய்ஸ்களில் கூறப்படும் தொகை வாதி நிறுவனத்திற்கு வரவாகவில்லை என்பதை வா.சா.ஆ.18 ன் மூலம் தெரிந்துகொண்டேன். மேற்படி இன்வாய்ஸ்கள் தவிர பிரதிவாதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட இதர இன்வாய்ஸில் கூறப்பட்ட தொகை பிரதிவாதி நிறுவனத்திலிருந்து வாதி நிறுவனத்திற்கு வரவு செய்யப்பட்ட விபரம் தெரிந்து கொண்டேன். இவ்வழக்கில் கூறப்பட்டுள்ள 9 இன்வாய்ஸ்களில் காணப்படும் சரக்குகள் பிரதிவாதி நிறுவணத்திற்கு கிடைக்கப்படவில்லை என்று பிரதிவாதி கட்சி செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**